**29.02.2020**

**பத்திரிக்கை செய்தி**

**இந்திய தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் (FSAI) சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் திட்டப்பணிகளுக்காக ஃபிஸ்ட் விருது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்டப்பணிகள் இந்தியாவின் தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு சங்கத்தின் (FSAI) மதிப்புமிக்க ஃபிஸ்ட் விருதுகளைப் பெற்றுள்ளது. பாதுகாப்பு, தீயணைப்பு மற்றும் அவசரகால உதவித் துறையில் அமைப்பு மற்றும் தனிநபர்களின் அசாதாரண பங்களிப்பை இந்த விருது அங்கீகரிக்கிறது.

இந்த ஆண்டு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் 27.02.2020 அன்று புதுதில்லியில் கிரேட்டர் நொய்டாவில் நடைபெற்ற FIST 2020 விருது விழாவின் போது பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து வசதிக்கான சிறந்த இந்திய திறன்கள் மற்றும் திறமை விருதுகள் 2020 (FIST) விருதினைப் பெற்றது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன இயக்குநர் (திட்டங்கள்) திரு.ராஜீவ் நாராயன் திவேதி இவ்விருதினை சர்வதேச தலைவர் திரு பங்கஜ் தர்கர் அவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.